## 23 சார்பு அணிகள் சிறகாகவும் சிறப்பாகவும் செயல்படுவதால்தான்

# தி.மு.கழகம் உயர உயர பறந்து கொண்டு இருக்கிறது!

## தூத்துக்குடியில் நடைபெற்ற கழக ஆலோசனைக் கூட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சியுரை!

தூத்துக்குடி, நவ.16-

**தூத்துக்குடியில் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலின் பேரில், மாவட்ட நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணிகளின் சார்பாக சந்திப்பு - ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை ஆற்றினார்.**

கூட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய எழுச்சி மிகு உரை வருமாறு:

வருகின்ற 2026-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்கின்ற வகையில், நம் கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், மாவட்ட நிர்வாகிகள் மற்றும் அனைத்து சார்பு அணிகளுடன் இந்த ஆலோசனைக் கூட்டம், சந்திப்புக் கூட்டம் தலைவரின் உத்தரவின் பேரில் இங்கு நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

### ஆலோசனைக் கூட்டம்

அதன்படி, சென்ற வாரம் விழுப்புரத்தில் விழுப்புரம் தெற்கு மாவட்ட நிர்வாகிகளுடன் சார்பு அணிகளுக்கான அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களை எல்லாம் சந்தித்து ஆலோசித்தோம். அதன் தொடர்ச்சியாக இன்றைய தினம் நம் தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்குட்டப்பட்ட மாவட்ட நிர்வாகிகள் மற்றும் கழகத்தின் அனைத்து சார்பு அணி நிர்வாகிகளுக்கான ஆலோசனைக் கூட்டம் இங்கு மிகச்சிறப்பாக அக்கா கீதாஜீவன் ஏற்பாட்டில் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. அதற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அக்கா கீதாஜீவன் அவர்களுக்குப் பாராட்டுகளையும், நன்றியையும் முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கூட்டத்தின் மூலம் உங்களையெல்லாம் சந்தித்து உரையாற்றுவதில் மிகுந்த பெருமை அடைகிறேன். மகிழ்ச்சி அடைகிறேன். தூத்துக்குடிக்கு எத்தனையோ முறை வந்து இருக்கிறேன். கழகத்தின் உறுப்பினராக வந்து இருக்கிறேன். தேர்தல் பிரச்சாரங்களுக்கு வந்து இருக்கிறேன். இளைஞர் அணிச் செயலாளராக வந்து இருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினராக வந்து இருக்கிறேன். விளையாட்டுத்துறையின் அமைச்சராக வந்து இருக்கிறேன். முதன்முறையாகத் துணை முதலமைச்சர் பொறுப்பை ஏற்று உங்களையெல்லாம் சந்தித்து உங்களின் வாழ்த்துகளைப் பெறுவதற்காக இன்று இங்கு வந்து இருக்கிறேன்.

### வாழ்த்துகளைப் பெற வந்துள்ளேன்

நான் துணை முதலமைச்சராகச் செப்டம்பர் 28-ஆம் தேதி பொறுப்பேற்றப்போது, தலைவர் அந்தப் பொறுப்பை எனக்குக் கொடுத்த பிறகு என்னை வாழ்த்துவதற்குத் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களில் இருந்தும் சென்னைக்குப் படையெடுத்து வந்தீர்கள். அப்போது ஒரேயொரு வேண்டுகோள் மட்டும் வைத்தேன். தயவுசெய்து யாரும் சென்னைக்கு வராதீர்கள் நானே உங்கள் மாவட்டத்திற்கு வருகிறேன். உங்களைப் பார்க்கிறேன். உங்களையெல்லாம் ஒவ்வொருவராகச் சந்திக்கிறேன். உங்கள் வாழ்த்துகளைப் பெறுவதற்கு உங்கள் மாவட்டத்திற்கு நானே வருகிறேன் என்று சொல்லி இருந்தேன். பலர் அதைக் கேட்டார்கள். பலர் அதைக் கேட்கவில்லை. இருந்தாலும் சென்னையில் பலமுறை உங்களைச் சந்தித்து இருக்கிறேன். இன்றைக்கு இங்கு உங்களையெல்லாம் சந்தித்து உங்களின் வாழ்த்துகளைப் பெறுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

### சிறப்பான வரவேற்பு

நேற்று மதுரைக்கு விமானம் மூலமாக வந்து, அங்கிருந்து தூத்துக்குடி வடக்கு, தெற்கு மாவட்டங்களின் வழியாக வரும்போது வழி நெடுக ஒரு சிறப்பான வரவேற்பை அளித்த, எழுச்சிமிகு மகிழ்ச்சியான வரவேற்பை அளித்த உங்கள் அத்தனைபேருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் துணை முதலமைச்சரா? இல்லை, இங்கு வந்திருக்கின்ற நீங்கள் அனைவருமே துணை முதலமைச்சரா என்று நினைக்கும் அளவிற்கு உங்களின் எழுச்சி, உங்களின் ஆரவாரம், உங்களின் அன்பை என்னால் உணர முடிந்தது.

முத்தமிழறிஞர் கலைஞராக இருக்கட்டும், நம் கழகத் தலைவராக இருக்கட்டும் தூத்துக்குடி மாவட்டத்தின் மீது எப்போதுமே தனிப் பாசம் உண்டு. தூத்துக்குடி மாவட்டத்தைப் பொறுத்தவரை, கழகத்தின் வீரம் மிக்க உடன்பிறப்புகள் நிறைந்த மாவட்டம்தான் தூத்துக்குடி மாவட்டம்.

### கலைஞரின் முரட்டுப் பக்தர்

கே.வி.கே.சாமி போன்றவர்களின் தியாகத்தால், இன்னும் சொல்லப்போனால், கலைஞரின் முரட்டுப் பக்தர் என்றும் கூறப்படுகின்ற மறைந்த அண்ணன் தூத்துக்குடி பெரியசாமி அவர்களால் உருவாக்கப்பட்ட, அவரின் உழைப்பால் உருவாக்கப்பட்ட மாவட்டம் தான் இந்தத் தூத்துக்குடி மாவட்டம்.

இந்தத் தூத்துக்குடி மாவட்டத்தில் கலைஞரின் கால் படாத கிராமங்களே இல்லை என்று சொல்லலாம். அதேபோல் நம் கழகத்தலைவர் அவர்களின் கைகளால் கொடி ஏற்றாத ஊர்களே இல்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு இந்த மாவட்டத்தில் அவர்கள் இரண்டு பேருமே கழகத்தை வளர்த்து இருக்கிறார்கள்.

### 4 லட்சம் வாக்குகள் வித்தியாசம்

நம் கழகத் தலைவர் அவர்களுக்கு இன்னொரு பெருமை என்னவென்றால், அவர் தலைமையில் நாம் சந்தித்த அத்தனை தேர்தல்களிலும் வெற்றியை மட்டுமே பெற்று இருக்கிறோம். குறிப்பாக, மக்களவைத் தேர்தலில் தூத்துக்குடி மக்களவைத் தேர்தலில் நம் வேட்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் அத்தை கனிமொழி கருணாநிதி அவர்களை 4 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிப்பெற வைத்துள்ளீர்கள் என்றால், அதற்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரின் வெற்றிக்காக உழைத்த கழக நிர்வாகிகள் அனைவருக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்த வரப்போகின்ற தேர்தல் மிகமிக முக்கியமான தேர்தல் என்பது உங்களுக்குத் தெரியும். இப்போது தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தல் தொடர்பான பணிகளை ஆரம்பித்துள்ள முதல் இயக்கம், ஒரே இயக்கம் நம் திராவிட முன்னேற்றக் கழகம்தான்.

நம் தலைவர் அவர்கள் இப்போதே சுற்றுப்பயணங்களையும், கள ஆய்வுகளையும் ஆரம்பித்துவிட்டார். மக்களுடன், மாணவர்களுடன், இளைஞர்களுடன் உரையாடி அவர்களுக்குத் தேவையான கோரிக்கைகளை உடனுக்குடன் தீர்வுகளை அளித்து வருகிறார். அதுமட்டுமல்லாமல், கழகத்தின் வெற்றியை 2026-இலும் தொடரச் செய்ய நம் தலைவர் அவர்கள் சட்டமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவையும் அமைத்திருக்கிறார்.

அந்த ஒருகிணைப்புக் குழு சார்பாக, சென்னை, அண்ணா அறிவாலயத்தில் ஒவ்வொரு அணியாக அழைத்து, அவர்களின் தேவைகள், அவர்களின் பிரச்சனைகள் அனைத்தையும் கேட்டறிந்து வருகிறோம். அணிகளின் செயல்பாடுகள், நிரப்பப்படாமல் இருக்கும் பொறுப்புகள், தேர்தலை நோக்கி நாம் செய்ய வேண்டிய பணிகள் ஆகியவற்றை எல்லாம் நாங்கள் ஆலோசித்துள்ளோம்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.11.2024) தூத்துக்குடி வடக்கு மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்களை சந்தித்து கலந்துரையாடினார். இந்நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன், மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### சார்பு அணிகளின் சந்திப்புக் கூட்டம்

இதைத் தலைவரிடமும் நாங்கள் தெரிவித்து இருக்கிறோம். அதன் தொடர்ச்சியாகத்தான் தலைவரின் உத்தரவின் பேரில், இன்றைக்குச் சார்பு அணிகளின் சந்திப்புக் கூட்டம் நடைப்பெற்றுக்கொண்டு இருக்கிறது.

ஒவ்வொரு மாவட்ட அமைப்பாக இருக்கட்டும் அல்லது சார்பு அணியாக இருக்கட்டும், கழகத்தின் செயல் வீரர்களுக்கும் தலைமையும், தலைவர் அவர்களும் எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான் இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்தோம்.

### 23 அணிகளின் உழைப்பு

எந்தவொரு இயக்கத்திற்கும் இல்லாத பெருமை நம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு. அது என்ன பெருமை என்றால், 23 சார்பு அணிகள் நம் கழகத்தில் மட்டும்தான் இருக்கின்றன. அணிகள் என்றால் ஆங்கிலத்தில் `விங்ஸ்' என்று சொல்வார்கள். `யூத் விங்', `ஸ்டூடண்ட் விங்', `மெடிக்கல் விங்', `ஐ.டி விங்' இப்படிப் பல அணிகள் நம் கழகத்தில் இருக்கின்றன. இத்தனை விங்ஸ்சும் கழக அமைப்போடு இணைந்து, சிறப்பாக மட்டுமல்ல விங்ஸ் என்று சொன்னால், அது சிறகாகவும் இருக்க வேண்டும். சிறகாகச் செயல்படுவதால்தான் இன்றைக்கு நம் கழகம் உயர, உயர பறந்து கொண்டு இருக்கிறது. கழகம் இவ்வளவு பெரிய வெற்றியைப் பார்த்திருக்கிறது என்றால், அதற்கு சார்பு அணிகளின் உழைப்பு மிகமிக முக்கியம்.

ஒரு போருக்குச் செல்கிறோம் என்றால், கும்பலாக, கூட்டமாகப் போகக்கூடாது. அதற்காகத் திட்டமிட்டு அணி, அணியாகச் செல்ல வேண்டும். அதற்காகத்தான் இந்தக் கூட்டம். அணி, அணியாகத் திட்டம்போட்டுச் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் சார்பு அணி கூட்டங்களை நாம் நடத்திக்கொண்டு இருக்கிறோம்.

### தீர்க்கக்கூடிய ஒன்றுதான்

நம் கழகம் அணி, அணியாகத் திட்டமிட்டு தேர்தல் பணிகளை மேற்கொண்டால் தலைவர் சொன்னதை போல 200 தொகுதிகளுக்கு மேல் 2026-ஆம் தேர்தலில் நிச்சயம் நாம் வெற்றிப்பெறுவோம்.

பொதுவாக, ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நடக்கும்போதும் ஒவ்வொரு அணியையும் சந்தித்துப் பேசும்போதும் எல்லா அணிகளும் சொல்கின்ற குறை என்று சொல்ல மாட்டேன். அவர்களின் மனதில் இருப்பதைச் சொல்வார்கள்.

அதாவது, தாய்க் கழகத்தினர் எங்களைச் சரியாகக் கவனிக்க மாட்டார்கள். எங்களுக்கு மரியாதை கொடுக்க மாட்டார்கள் என்று கூறுவார்கள். அதே போல், கழக அமைப்புகளின் நிர்வாகிகள் சார்பு அணிகள் எங்களைக் கலந்து ஆலோசித்து நிகழ்ச்சிகள் நடத்த மாட்டேன் என்கிறார்கள். எங்களிடம் கருத்து கேட்க மாட்டேன்கிறார்கள். உங்களின் உத்தரவைப் பெறமாட்டேன்கிறார்கள். இது மாமியார், மருமகள் பிரச்சினை மாதிரிதான். தீர்க்க முடியாத பிரச்சனை கிடையாது. இது ஒரு பெரிய பிரச்சினையே கிடையாது. இது பேசித் தீர்க்கக்கூடிய ஒன்றுதான். களப்பணி ஒன்றுதான் நம் பணிகளை வெளியே அடையாளப்படுத்தும்.

### தவிர்த்துவிட முடியாது

உங்களில் ஒருவரால் ஒரு 500 வாக்குகளைத் திரட்ட முடியும் என்ற சூழல் வந்துவிட்டால், உங்களை யாராலுமே தவிர்த்துவிட முடியாது. அதற்கு நீங்கள் உங்களைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும். யார் வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி, நான் என் கட்சிக்காக, கழகத்திற்காக, என் கொள்கைக்காக நான் பணியாற்றுகிறேன் என்று செயல்பட்டு, நீங்கள் ஒவ்வொருத்தரும் இன்னொருவருக்கு முன்னுதாரணமாகத் திகழ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எல்லா நேரங்களிலும் கட்சி பணிகளைச் செய்யுங்கள் என்று கேட்க மாட்டேன். தலைவர் அவர்கள் கோவையில் ஒரு வாரத்திற்கு முன்பு பேசும்போது இதைக்குறிப்பிட்டுப் பேசினார். குடும்பத்திற்காக நேரத்தைச் செலவிடுங்கள், தொழில் செய்பவராக இருந்தால், அதில் கவனத்தைச் செலுத்துங்கள், ஒரு நாளில் இரண்டு மணி நேரம் கழகத்திற்காக, கழகத்தின் கொள்கைக்காக, அரசின் திட்டங்களை மக்களிடம் எடுத்துக் கொண்டு போய்ச் சேருங்கள்.

வார இறுதி சனி, ஞாயிறு நாட்களில் ஒரு நாளை மட்டும் கழகப் பணிகளுக்காக உங்களை ஈடுப்படுத்திக் கொள்ளுங்கள்.

சார்பு அணி நிர்வாகிகள் நாம் சார்பு அணிதானே என்று சுணக்கமாக இருந்துவிடக்கூடாது. ஏனென்றால், இளைஞர் அணி என்ற அணிதான் இன்றைக்குத் தமிழ்நாட்டின் முதலமைச்சரையே கொடுத்து இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். அதே போல் மாணவர் அணி என்ற அணிதான் கழகத்தின் பொதுச்செயலாளரைக் கொடுத்து இருக்கிறது.

### சட்டமன்ற உறுப்பினர்கள்

மகளிர் அணி என்ற அணிதான் கழகத்தின் துணைப் பொதுச்செயலாளரையும் கொடுத்து இருக்கிறது என்பதை நீங்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

மகளிர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, வழக்கறிஞர்கள் அணி இப்படிப் பல அணிகளில் இருந்து சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் பெருமக்கள் பலபேர் இன்றைக்கு முன்னேறி வந்து இருக்கிறார்கள் என்றால், அவர்களின் உழைப்பு, அவர்களின் பணிகள்தான் காரணம்.

> **“உங்களில் ஒருவரால் ஒரு 500 வாக்குகளைத் திரட்ட முடியும் என்ற சூழல் வந்துவிட்டால், உங்களை யாராலுமே தவிர்த்துவிட முடியாது. அதற்கு நீங்கள் உங்களைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும். யார் வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி, நான் என் கட்சிக்காக, கழகத்திற்காக, என் கொள்கைக்காக நான் பணியாற்றுகிறேன் என்று செயல்பட்டு, நீங்கள் ஒவ்வொருத்தரும் இன்னொருவருக்கு முன்னுதாரணமாகத் திகழ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.”**

இங்கு இருக்கின்ற மாவட்ட நிர்வாகிகளில் பெரும்பாலானோர் சார்பு அணிகளில் இருந்து திறம்படச் செயலாற்றி வந்தவர்கள்தான். ஆகவே, சார்பு அணி நிர்வாகிகளுக்கான முக்கியத்துவம் எப்போதும் இருந்துகொண்டு இருக்கிறது. அணிகள் என்பது கழக அமைப்பில் முக்கியப் பொறுப்புகளில் பணியாற்றுவதற்கான ஒரு பயிற்சிக் களம் என்றே சொல்லலாம்.

### பட்டியல் சரிபார்ப்பு!

உங்களின் பணியை, உங்களின் கடமையை மட்டுமே சரியாகச் செய்துக்கொண்டு இருங்கள். உரிய நேரத்தில் நம் தலைவர் அவர்கள் உங்களுக்கான அங்கீகாரத்தைக் கண்டிப்பாக நிச்சயமாகப் பெற்றுத் தருவார்கள் அதற்கு நான் பொறுப்பு.

தேர்தலுக்காக வாக்காளர் பட்டியலைச் சரிபார்ப்பது, கழகத்திற்கு ஆதரவான குடும்பங்களைத் தக்க வைப்பது, நடுநிலையான வாக்காளர்களைக் கழகத்திற்கு ஆதரவானவர்களாக மாற்றுவது போன்ற பணிகளைக் கழக அமைப்பினரும், சார்பு அணிகளும் சேர்ந்து பணியாற்ற தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தலைமைக் கழகமும், மாவட்டக் கழகமும் உங்களுக்கு அதற்கான வழிகாட்டுதல்களைக் கண்டிப்பாக வழங்கும். வழக்கறிஞர்கள் அணி நிர்வாகிகளும் இங்கு வருகை தந்துள்ளீர்கள். தேர்தல் நேரத்தில் உங்களின் பணி மிகமிக முக்கியமானது. பி.எல்.எ-2, பி.எல்.சி நிர்வாகிகள் அவர்களை ஒருங்கிணைத்து அவர்களுக்கான பயிற்சிகளை மாவட்ட கழகத்தோடு இணைந்து வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

### பிரித்துக் கொள்ளுங்கள்

உங்களுக்கான வேலைகளைப் பிரித்துக் கொள்ளுங்கள். உங்களுக்குள் ஒரு ஒருங்கிணைப்பு இருக்க வேண்டும். மாதம் ஒரு முறையாவது மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் அளவில் கலந்துரையாடல் கூட்டங்களை நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிக் கலந்துரையாடும்போதும், திட்டங்களை வகுக்கும்போதும் சிறுசிறு கருத்து வேறுபாடுகள் நிச்சயமாக வரத்தான் செய்யும். ஆனால், நமக்கான நோக்கம் 2026-ஆண்டு தேர்தல் மட்டும்தான் நோக்கமாக இருக்க வேண்டும். அதற்கான முன்னெடுப்புகளை, ஆலோசனைகளை மேற்கொள்ளுங்கள்.

வாக்காளர்களைச் சந்திக்க நிறையச் செலவு செய்ய வேண்டுமா? பிரமாண்டமான கூட்டம் நடத்த வேண்டுமா? பெரிய மண்டபத்தில் நிகழ்ச்சி நடத்த வேண்டுமா? அதெல்லாம் எதுவுமே தேவையில்லை. மிகவும் எளிமையாக, செலவே செய்யாமல் தெருமுனைக் கூட்டங்கள், சின்னச்சின்ன நலத்திட்ட உதவிகள் இப்படிச் சிறிய நிகழ்ச்சிகளை மக்களுக்கு, கழகத்தினருக்கு பயன்பட உள்ள நிகழ்ச்சியாக நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதை நீங்கள் செய்வதற்கு முன்பு மாவட்டச் செயலாளரிடம், மாநில நிர்வாகிகளிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு, அவர்களின் அனுமதியை வாங்கிவிட்டு அதைச் செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். அவரவரின் பகுதிகளில் தெருக்களைப் பிரித்துக்கொள்ளுங்கள். அந்தத் தெருவில் உள்ளவர்களை நம் கழக உறுப்பினர்களாகச் சேருங்கள். அதற்கான முயற்சிகளில் ஈடுபடுங்கள். கழக அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டுபோய்ச் சேருங்கள்.

### ஒவ்வொரு வீட்டிலும் ஒரு பயனாளி

ஒவ்வொரு மாவட்டத்திற்கும், ஒவ்வொரு ஒன்றியத்திற்கும், ஒவ்வொரு ஊருக்கும் இல்லை, ஒவ்வொரு வீட்டிற்கும், ஒவ்வொரு தனி மனிதருக்கும் நம் கழக அரசு, திராவிட மாடல் அரசு, நம் முதலமைச்சர் அவர்கள் பல திட்டங்ளைக் கொடுத்து வருகிறார். ஒவ்வொரு வீட்டிலும் ஒரு பயனாளி இருப்பார் அவர்களைப் போய் சந்தியுங்கள். அந்தத் தாய்மார்களைச் சந்தியுங்கள். நம் கழக அரசின் திட்டங்களைப் பற்றிச் சொல்லுங்கள். எவ்வளவு திட்டம் வந்து இருக்கிறது.

எந்தெந்த திட்டங்களில் உங்கள் வீட்டில் பயனாளிகள் இருக்கிறார்கள் என்று சொல்லுங்கள். கண்டிப்பாக ஏதாவதொரு திட்டத்தில் ஒரு பயனாளி இருப்பார்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால், இந்தத் தூத்துக்குடி மாவட்டத்திற்குச் செய்யப்பட்ட திட்டங்களைப் பற்றி புள்ளிவிவரத்துடன் எடுத்துச் சொல்லுங்கள். உதாரணத்திற்குத் தூத்துக்குடியில் நம் தலைவர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு முதல் கையெழுத்துப்போட்டார்.

மகளிருக்கான விடியல் பயணம் திட்டம். தூத்துக்குடி மாவட்டத்தில் மட்டும் இந்த விடியல் பயணம் திட்டம் வாயிலாக 8 கோடிப் பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு மகளிரும் இந்தத் திட்டத்தின் வாயிலாக மாதந்தோறும் கிட்டத்தட்ட ஆயிரம் ரூபாய் சேமிக்கிறார்கள். இதைப்பற்றி மக்களிடம் பேசுங்கள்.

### 12 ஆயிரம் மாணவ, மாணவிகள்

புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம் இதன் வாயிலாக மாதம் 12 ஆயிரம் மாணவ, மாணவிகள் தூத்துக்குடியில் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகை பெற்று வருகிறார்கள்.

இந்தியாவிலேயே முதன்முறையாக முதலமைச்சரின் காலை உணவு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது நம் தமிழ்நாட்டில்தான். இந்த மாவட்டத்தில் மட்டும் சுமார் 40 ஆயிரம் குழந்தைகள் திங்கள் முதல் வெள்ளி வரை ஒவ்வொரு பயன்பெற்று வருகிறார்கள்.

### 3 லட்சம் மகளிர்

அதேபோல் முக்கியமான திட்டம். கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம். தமிழ்நாடு முழுக்க ஒரு கோடியே 16 லட்சம் மகளிர் பயன்பெற்று வருகிறார்கள். தூத்துக்குடி மாவட்டத்தில் மட்டும் 3 லட்சம் மகளிர் ஒவ்வொரு மாதமும் ஆயிரம் ரூபாய் பெற்று வருகிறார்கள்.

5 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் `விங் பாஸ்ட்' தொழிற்சாலை இந்த மாவட்டத்திற்கு விரைவில் வர இருக்கிறது. இதையெல்லாம் மக்களிடம் எடுத்துச் சென்று பேசினாலே, அவர்களிடம் சொன்னாலே போதும். தேர்தலுக்கு முன்பாக ஒவ்வொரு வாக்காளரையும் குறைந்தது நான்குமுறை நாம் சந்தித்தாக வேண்டும். அதை நாம் ஒரு இலக்காக நிர்ணயித்துக்கொண்டு அதைநோக்கி நாம் பயணம் செய்ய வேண்டும்.

பொதுமக்கள் வைக்கின்ற கோரிக்கைகளை, உங்களால் முடிந்தவரை அதை நிறைவேற்றித் தர முயற்சி செய்யுங்கள். உங்களால் இயலாதவற்றை, சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அமைச்சர், தொகுதிப் பொறுப்பாளர், தொகுதி பார்வையாளர்கள் கவனத்திற்குச் சென்று அதை நிறைவேற்றிக் கொடுக்க முயற்சி செய்யுங்கள்.

### சமூக வலைத்தளங்கள்

மிக முக்கியமாகக் களத்தில் எப்படி உழைக்கிறீர்களோ அதேபோல் இன்றைக்குக் களம் எப்படி முக்கியமோ, அதேபோல் சமூக வலைத்தளங்கள் அதுவும் மிகமிக முக்கியம். அதிலும், நீங்கள் அனைவரும் ஆக்டிவாக செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆக்டிவாக என்றால் பொய் செய்திகள் எல்லாம் போட தேவையில்லை. மற்ற கட்சிகள் மாதிரி வதந்திகள் எல்லாம் பரப்ப தேவையில்லை.

நம் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு மட்டும்தான் வரலாறும் இருக்கிறது, சொல்வதற்குத் திட்டங்களும் இருக்கின்றன. அதனால் தயவுசெய்து நமது வரலாற்றைப் பற்றிப் பேசுங்கள். கலைஞரின் ஆட்சி, நம் தலைவர் அவர்களின் ஆட்சி, சாதனைத் திட்டங்களை எல்லாம் கொண்டுபோய்ச் சேருங்கள்.

### 100 இளம் பேச்சாளர்கள்

இளைஞர் அணி சார்பாக மண்டல வாரியாக, பாக அளவில் சமூக வலைதளப் பயிற்சிக் கூட்டங்களைத் தொடர்ந்து அனைத்து மாவட்டங்களிலும் நடத்தி வருகிறோம். நீங்களும் அதுபோன்ற பயிற்சிகளை நடத்தலாம். சமீபத்தில் நம் தலைவர் கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு, இளைஞர் அணி தலைவர் அவர்கள் கொடுத்த பொறுப்பு. 100 இளம் பேச்சாளர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று. கிட்டத்தட்ட 17 ஆயிரம் இளைஞர்கள், குழந்தைகள் அதில் கலந்து கொண்டார்கள். அதில் 182 பேர் கடைசிச் சுற்றுக்கு வந்தார்கள். அதில் முதல் மூன்று பேச்சாளர்களுக்கு, தலைவர் அவர்களே பரிசுகளைக் கொடுத்தார்.

### அரசின் சாதனைகள்

பயிற்சிப் பாசறைக் கூட்டங்கள் நடத்தலாம். இளைஞர் அணி சார்பாக நாங்கள் ஒவ்வொரு சட்டமன்றத்திற்கும் நடத்தினோம். ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் நடத்த முயற்சிகள் எடுத்துக்கொண்டு இருக்கிறோம்.

இந்தப் பேச்சாளர்களைப் பயன்படுத்தி, தெருமுனைக் கூட்டங்கள், யூடியூப்பில் அவர்களின் வீடியோக்களைப் பதிவு செய்யுங்கள். இவையெல்லாம் சின்னச் சின்ன முயற்சி. இதற்கெல்லாம் பொருட்செலவு ஆகாது. எனவே டிவிட்டர், பேஸ்புக், முக்கியமாக இன்ஸ்டாகிராம் போன்ற சமூக வலைத்தளப் பக்கங்களில் அனைவரும் செயல்படுங்கள், ஆக்டிவாக இருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊடகங்கள் எல்லாம் உண்மையைச் சொல்லுமா என்று தெரியாது. எதிர்கட்சிகள் விமர்சிக்க எதுவுமே இல்லாமல் வெறும் வதந்திகளை மட்டுமே பரப்புகிறார்கள். ஆகவே நீங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஊடகமாக அனைவரும் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

### 200 தொகுதிகளுக்கு மேல் வெல்லும்

அரசின் சாதனைகளைச் சிறு, சிறு குறிப்புகளாக, ஃபோட்டோ கார்டுகளாக நீங்கள் வெளியிடலாம். சாட்ஸ் வடிவிலான வீடியோ கிளிப்ஸ்களாகவே நீங்களே பதிவு செய்து வெளியிடலாம். கழக அணி 200 தொகுதிகளுக்கு மேல் வெல்லும் என்று முப்பெரும் விழாவில் தலைவர் அவர்கள் உறுதியாகச் சொல்லி இருக்கிறார் என்றால், அது எதுவோ ஆணவத்தின் அடிப்படையில் இல்லை.

இங்க வந்திருக்கின்ற அனைத்து ஒன்றியக் கழகச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள், சார்பு அணிகளான உங்கள் மீது இருக்கின்ற நம்பிக்கையில்தான் தலைவர் அவர்கள் உறுதிமொழியை ஏற்று இருக்கிறார்.

எனவே நம்மை நம்பி, கழகத்தின் வீரர்களான உங்களை நம்பிதான் தலைவர் அவர்கள் அந்த உறுதிமொழியை ஏற்று இருக்கிறார். ஆகவே, தலைவர் அவர்கள நிர்ணயித்த இலக்கு மட்டும்தான் நம் கண்களுக்குத் தெரிய வேண்டும். அதற்கு நீங்கள் அனைவரும் 100 சதவிகிதம் அல்ல 200 சதவிகிதம் உழைத்தால்தான் 200 தொகுதி வெற்றிப்பெற முடியும் என்பதை நீங்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

### உழைப்பால் கிடைத்த வெற்றி

இங்கு 23 அணிகள் இருக்கலாம். மாவட்டம், ஒன்றியம், நகரம், பேரூர் எனப் பல அமைப்புகள் இருக்கலாம். ஆனால், எத்தனையோ அணிகள் இருந்தாலும், மனதில் ஒன்றே ஒன்றை மட்டும்தான் வைத்துக் கொள்ள வேண்டும். நாம் அனைவரும் ஒரே அணி. அது கலைஞர் அணி. அதை மட்டும் மனதில் வைத்துக்கொண்டு நீங்கள் அனைவரும் செயல்பட வேண்டும்.

2024-ல் பாசிஸ்ட்டுகளுக்கு நாம்தான் கடிவாளம் போட்டோம். 2026-ஆம் ஆண்டுத் தேர்தலில் அந்த வெற்றியின் வாயிலாகப் பாசிஸ்ட்டுகளின் அடிமைகள் அவர்களுக்கு நாம்தான் கடிவாளம் போட்டு வீட்டிற்கு அனுப்ப வேண்டும்.

அவர்களின் ஏஜெண்டுகள் அ.தி.மு.க.வினரையும் மொத்தமாகத் தூக்கி தமிழ்நாட்டிற்கு வெளியே போடுவோம் என்று கூறிக்கொண்டு, 2026-ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் கழகம் பெறவுள்ள வெற்றி உங்களின் உழைப்பால் கிடைத்த வெற்றி. உங்களின் சாதனை வெற்றியாக இருக்க வேண்டும் என்று கூறி, உங்கள் அனைவருக்கும் எனது அன்பையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் தேர்தல் பணியை நாம்தான் முதன் முதலில் ஆரம்பித்து இருக்கிறோம். தேர்தல் பணி மட்டுமல்ல, தேர்தல் வெற்றியிலும் நாம்தான் முதலில் நிற்க வேண்டும் என்று கூறிக்கொண்டு, இந்தக் கூட்டம் இன்றோடு முடிந்து விடுகின்ற கூட்டம் அல்ல.

அடிக்கடி உங்களைத் தொடர்ந்து சந்திக்கிறேன் என்று கூறி, இந்தச் சிறப்பான கூட்டத்தை ஏற்பாடு செய்த அக்கா கீதாஜீவன் அவர்களுக்கு மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு வந்திருக்கும் கழகத்தின் அனைத்து மூத்த முன்னோடிகள், அனைத்து சார்பு அணிகள், அத்தனைப் பேருக்கும் எனது வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

அமைச்சர்கள் கீதாஜீவன், அனிதா இராதாகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயன், மாநகர மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகரச் செயலாளர் ஆனந்தசேகரன், இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், இன்பா ரகு, வர்த்தகர் அணி மாநிலத் துணைச் செயலாளர் வசந்தம் ஜெயக்குமார், மீனவர் அணி மாநிலத் துணைச் செயலாளர் துறைமுகம் ஃப்ளாரன்ஸ், செல்வராஜ், மாவட்டக் கழகப் பொருளாளர் இரவீந்திரன், மாவட்டச் துணைச் செயலாளர்கள் ராஜ் மோகன் செல்வின், ஆறுமுகம், ஏஞ்சலா மற்றும் கழக அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் கழக முன்னணியினர், கழக இளைஞர் அணியினர் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.